| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அறிவழகன், த/பெ ராமசாமி | அ.வ.எண்.24/2016 | 24.07.2026 |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. அ.வ.எண்.24/2016 ல் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அ.வ.எண்.152/2006 வழக்கு முருகேசனால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.152/2006 வழக்கில் நான், எனது அம்மா, எனது மாமா மதுரைமுத்து, செல்லப்பன் ஆகியோர்கள் மட்டுமே பிரதிவாதிகள் என்றால் சரிதான். அ.வ.எண்.152/2006 ல் நான் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்திற்கு நான் தான் விவரம் சொன்னேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைதான்.
2. எனது தாயார் உடல்நலக்குறைவால் மட்டுமே சாட்சியம் அளிக்க வரவில்லையா என்றால் எனது தாயாருக்கு கர்ப்பபை எடுக்கப்பட்டுள்ளது, நீரழிவு நோய் உள்ளது. எனது தாயாருக்கு சுமார் 89 வயதிருக்கும், அதனால் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை. எனது தாயார் பேசும் நிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு நடக்க முடியுமா என்றால் நடக்க முடியும், மூச்சு திணரல் ஏற்படும். மேற்படி உடல்நிலை ரீதியான பிரச்சனைக்கு மருத்துவ சிகிச்சை எடுத்துவருகிறார். மேற்படி உடல்நிலை குறைவு எனது தாயாருக்கு சுமார் 20 வருடமாக இருக்கிறது. எனது தாயார் மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்து கொண்டிருப்பதற்கு ஆவணம் எதுவும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது தாயாரை சாட்சியாக விசாரிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி நடவடிக்கை எதுவும் எனது தரப்பில் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது தாயார் எனக்கு எழுதி வைத்த பொது அதிகாரப்பத்திரம் திருச்சியில் வாங்கப்பட்டு, திருச்சியில் தயார் செய்யப்பட்டு, இலால்குடி நோட்டரி பப்ளிக் ராஜா என்பவர் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பொது அதிகாரப்பத்திரம் எனது தாயார் எந்த ஊரில் வைத்து கையொப்பம் செய்தார் என்றால் இலால்குடிக்கு வந்து கையொப்பம் செய்தார். மேற்படி பொது அதிகார பத்திரம் 11.01.2026-ம் தேதி சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

4. பொது அதிகார பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. பொது அதிகார பத்திரம் ஆங்கிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனது தாயார் கையொப்பம் செய்வதற்கு முன்பாக மேற்படி ஆவணத்தில் சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பம் செய்தாரா என்றால் எனது அம்மாவிடம் கையொப்பம் பெறுவதற்கு முன்னதாக மேற்படி ஆவணம் படித்து காண்பிக்கப்பட்டது. மேற்படி விவரம் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பொது அதிகார பத்திரத்திலும் திருமங்கலம் மற்றும் கோவிலடி ஆகிய ஊரை சேர்ந்தவர்கள் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை.

5. என்னிடம் காட்டப்படும் பொது அதிகார பத்திரத்திலும், பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் அசலிலும் சாட்சி கோவிந்தராஜ் என்பவரின் கையொப்பம் மாறுபட்டுள்ளது என்றால் பொது அதிகார பத்திரத்தில் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.4 ஆவணத்திலும், பொது அதிகார ஆவணத்திலும் கையொப்பம் செய்த கோவிந்தராஜ் என்பவர் ஒரே நபர் தான். மேற்படி கோவிந்தராஜின் அப்பா பெயர் முருகன் ஆகும். பொது அதிகார பத்திரத்தில் கோவிந்தராஜின் அப்பா பெயரின் முதல் எழுத்து தமிழிலும், கையொப்பம் ஆங்கிலத்திலும் உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்லும் அளவிற்கு நல்ல உடல்நிலையுடன் இருப்பதால் தான் இலால்குடி வந்து பொது அதிகார பத்திரத்தில் கையொப்பம் செய்துவிட்டு சென்றுள்ளார் என்றாலும், எனது தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் நான் செய்யும் கட்சிக்கு விரோதம் ஏற்படும் என்பதால் தான் எனது தாயாரை நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

6. எனது தாத்தாவை கோவிலடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனது தாயார் தான் சேர்த்தார். எனது தாத்தாவிற்கு நிரந்தர குடியிருப்பு திருமங்கலம் தான். ஆனால் 2000 – 2007 ம் ஆண்டு வரை எனது தாயார் பராமரிப்பில் எனது தாத்தா இருந்தார். எனது தாத்தாவிற்கு கோவிலடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆள்வரைக்குள் எந்த குடியிருப்பும் இல்லை என்றாலும், அதுபோல் சாகுபடி நிலங்கள்

எதுவும் இல்லை என்றாலும் சரிதான். மேற்படி கோவிலடியில் எங்களுக்கு நிலம் இருந்து அதனை எனது அண்ணன் விவசாயம் செய்துவந்ததாலும், எனது தாத்தா எனது அண்ணனுடன் இருந்ததாலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக்கொண்ட அட்டை மற்றும் எனது தாத்தாவின் வாக்காளர் அடையாள அட்டையின் அடிப்படையில் மேற்படி கூட்டுறவு வங்கியில் கணக்கு துவங்கப்பட்டது.

7. எனது குடும்பத்தினருக்கு கோவிலடியில் குடும்ப அட்டை இருந்தது. என்னிடம் காட்டப்படும் எனது தாத்தாவின் வாக்காளர் அடையாள அட்டை 29.03.2006 ம் ஆண்டு கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கோவிலடி ஆராம்ப சுகாதார நிலைய புற நோயாளி பதிவு சீட்டு 08.12.2006 ம் தேதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது தவிர அதற்கு முந்தைய தேதிகளிலும் சீட்டுகள் உள்ளது அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்கள் எனது தாத்தா தைலான் கோவிலடியில் குடியிருந்தார் என்று காண்பிப்பதற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு நிரந்தர முகவரி திருமங்கலம் என்றாலும், அவரது மகளான எனது தாயாரை யதார்த்தமாக பார்க்க வந்த போது அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி தாவா சொத்தில் தற்போது

எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதத்திற்காக பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி எனது அம்மாவிற்கு உரிமை ஏற்பட்டதாக வைத்து கொண்டாலும், தற்போது வரை எனக்கு தனிப்பட்ட முறையில் தாவா சொத்தில் எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணம் நடைமுறைக்கு வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கும் எனது அம்மா பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம், பட்டா போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

9. எனது அம்மா பெயருக்கு பட்டா ஏற்படுவதற்கு முன்பாக வருவாய் துறையினர் விசாரணை எதுவும் மேற்கொண்டார்களா என்றால் எனது அம்மா பத்திரத்தின் அடிப்படையில் பட்டா வழங்க கோரி மனு தாக்கல் செய்ததன் அடிப்படையில், எனது அம்மா பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. நான் சொல்வது போல் வருவாய் துறையினர் எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் எனது தாயார் பெயரில் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.வ.எண்.152/2006 வழக்கை தாக்கல் செய்த போது எனது தாத்தா தைலான் எங்களது பராமரிப்பில் இருந்தும், எனது தாத்தா தைலானை நாங்கள் மேற்படி வழக்கில் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ சேர்க்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வயோதிகத்தின் காரணமாக எனது தாத்தா சொத்தை

எனது அம்மா பெயரில் எழுதி வைத்துவிட்டதால், வழக்கை நீங்களே பார்த்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்.

10. எனது தாத்தாவிற்கு மொத்தம் 9 வாரிசுகள் ஆவார்கள். நடராஜன், கந்தர், எனது அம்மா பட்டு, பன்னீர், மணி, செல்லப்பன், பராமானந்தம், முருகேசன் மற்றும் மதுரைமுத்து (எ) ரவி ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி இரண்டு வழக்குகளிலும் முருகேசன் மட்டுமே வாதி என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டில் பறனி உள்ளது என்றாலும், மேற்படி பறனியில் ஒருபுறம் செல்லப்பன் குடும்பத்தாரும், மற்றொரு புறம் வாதியும் சாமான்கள் போட்டு வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டின் ஒரு பகுதியில் வாதி முருகேசன் குடியிருந்து எனது தாத்தா பெயரில் வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் உள்ள வீட்டில் மதுரை முத்து (எ) ரவியின் மற்றும் அவரது 2 வது மனைவியும் தான் எனது அம்மாவின் அனுமதியின் பேரில் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி அனுமதி எழுத்துபூர்வமாக உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாக தான் உள்ளது. மேற்படி மதுரை முத்து மற்றும் வாதி முருகேசன் ஆகியோர் தைலானின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

11. என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.152/2006 ல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 20.07.2015 தேதியிட்ட பட்டா எண்.887 ல் தைலானின் வாரிசுகள் அனைவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி வழக்கில் என்னிடம்

காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்ட 21.07.2007 தேதியிட்ட பட்டா எண்.457 ல் தைலானின் வாரிசுகுள் அனைவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி ஆவணங்கள் சட்டத்திற்கு புறம்பாக வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்களாகும். அ.வ.எண்.152/2006–ல் தைலானின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதில் உள்ள விவரங்கள் சரிதான் என்றாலும், மேற்படி சான்று சரியானது, ஆனால் வழக்கிற்கு பின்னிட்டு 2007 ம் ஆண்டு எனது தாத்தா இறந்த பிறகு பெறப்பட்டது. மேற்படி கூட்டு பட்டாவை ரத்து செய்ய வேண்டி ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் வருவாய் துறையினர் வழக்கு நிலுவையில் இருப்பதால், மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி மனுவின் நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த மனுவிற்கு வருவாய் துறையில் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னார்கள். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், தைலானின் வாரிசு சான்றின் அடிப்படையில் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. பி.வா.சா.ஆ.4 செட்டில் மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது தாயார் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எனது தாத்தா தைலான் கை ரேகை வைத்து எனது அம்மாவிற்கு ஏற்படுத்தி

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்கள் எங்களுக்கு வேண்டிய நபர்கள் என்றாலும், அவர்களை வைத்து நாங்கள் மேற்படி ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என எதிர் கோருரிமையோ அல்லது தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தற்போது இரண்டு வழக்குகள் நிலுவையில் இருப்பதால் தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை.

13. வீட்டு வரி ரசீதை எனது அம்மா பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் வீட்டு வரி ரசீதை எனது தாத்தா பெயரில் தான் கொடுத்து வருகிறார்கள். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எனது தாத்தா ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும், மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், மேற்படி தாவா சொத்து நாளது தேதிவரை எங்களது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் எனது தாத்தா பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்திருந்தால், நான் அவரை அ.வ.எண்.152/2006 ல் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றால் மேற்படி ஆவணத்தை எனது தாத்தா தான் எழுதி கொடுத்தார்.

14. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தைலானின் ஆண் வாரிசுகள்

அவரை பராமரிக்காத காரணத்தினால் எனது தாயார் பெயருக்கு மேற்படி ஆவணம் எழுதி வைக்கப்பட்டதாக மேற்படி ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் முதலில் மேற்படி ஆவணத்தில் எழுதப்பட்டு, பின்னிட்டு சார்பதிவாளர் கேட்டதற்கு இணங்க மேற்படி வரிகள் அடிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் திருமங்கலம் முகவரியுள்ள 2005 ல் வழங்கப்பட்ட குடும்ப அட்டையில் எனது தாத்தா தைலான், அவரது மனைவி பெரியக்காள் மற்றும் வாதி முருகேசன் ஆகியோர்கள் பெயர் மட்டுமே தாவா சொத்துள்ள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணம் தவறானதாகும். மேற்படி ஆவணத்தில் பழைய குடும்ப அட்டையின் எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்ட ஆவணமாகும். பி.வா.சா.ஆ.4 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், வாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் தைலானின் வாரிசு என்ற அடிப்படையில் இருந்து வருகிறார் என்றாலும், எனது தாயார் தாவா சொத்தில் ஒருபோதும் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**Signed,**

அறிவழகன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு

கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.